**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் :CC.No. 280/2017**
**வழக்கு சாட்சி PW– 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருப்பதி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | நாராயணசாமி | தொழில் | : | காவல்துணைக் கண்காணிப்பாளர் |
| கிராமம் | : | திருவண்ணாமலை | வயது | : | 54 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Wednesday of 29.07.2026.

**(எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருவண்ணாமலை மாவட்டம் எஸ்.ஜே.கெச்.ஆர் பிரிவில் காவல்துணைக் கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். நான் தென்காசி காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 23.07.2011 ம் தேதி, தென்காசி காவல் நிலைய குற்றஎண்.809/2011, சட்டப்பிரிவுகள் 379 இதச வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தபோது, எதிரிகளை தேடி வந்த நிலையில் அதே தேதி 12.00 மணியளவில் தென்காசி யானைப்பாலம் அருகே நின்று கொண்டிருந்த நபர்களை விசாரித்தபோது, அவர்கள் பல்வேறு குற்ற சம்பவம் குறித்து தெரிவித்ததால் எதிரிகள் அருணாச்சலம், ஆறுமுகம், ராஜகோபால் ஆகியோர்களை கைது செய்து, சாட்சிகள் ராமநாதன் மற்றும் பரமசிவன் ஆகியோர் முன்னிலையில் விசாரிக்க எதிரி அருணாச்சலம் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில்

பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தென்காசி காவல்நிலைய வழக்கு பற்றியும், பல்வேறு வழக்குகள் சம்பந்தமாகவும், இந்த வழக்கில் 15.02.2011ம் தேதி, சேர்ந்தமரம் காவல்நிலைய எல்கைக்குட்பட்ட சேர்ந்தமரம் ஊருக்கு வடக்கேயுள்ள காற்றாலை உள்ள இடத்தில் கிடந்த சுமார் 60 மீட்டர் காப்பர் கேபிள் கம்பிகளை வெட்டி எடுத்து ராஜகோபால் கிட்ட கொண்டு போய் கொடுத்ததாகவும், அதை வாங்கிக்கிட்டு ரூ.1500/– கொடுத்ததாகவும் கூறினார். அன்றைய தினம் 14.00 மணிக்கு அம்பாசமுத்திரம் லாவண்யா பள்ளிக்கூடம் பின்புறம் சுமார் 16.500 கிலோ உருக்கிய செம்புக்கட்டிகள் மற்றும் கேபிள் ஒயர் 2 மீட்டர் ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். பின்னர் எதிரிகள் மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை நிலையம் கொண்டு வந்து நிலைய பதிவேடுகளில் பதிவு செய்து, இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட காப்பர் கம்பி, செம்பு கட்டிகள் ஆகியவை சேர்ந்தமரம் காவல்நிலைய குற்ற எண்.335/2011 வழக்கில் சம்பந்தப்பட்டதாக தெரியவந்ததால் உரிய படிவம் மூலம் சேர்ந்தமரம் காவல்நிலைய ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.2 ஆகும். (அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தின் அசல் நகல்கள் சி.சி.எண்.281/2017 வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஒப்புதல் வாக்குமூலத்தில் சான்றிட்ட நகல் மட்டுமே இந்த வழக்கு கோப்பில் உள்ளது).

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –**

நான் சொன்ன நாள், நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், அவர் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவயிடத்திலிருந்து சான்று பொருட்கள் எதையும் நான்

கைப்பற்றவில்லை என்றாலும், இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட சான்றுபொருட்களுக்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.30 17:41:01 +0530